# PRESS RELEASE

Communications Department, 30, Janadhipathi Mawatha, Colombo 01, Sri Lanka
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| Issued By | நிதியியல் உளவறிதல் பிரிவு |
| Date | 2025 ஆகஸ்ட் 06 |


## நிதியியல் உளவறிதல் பிரிவினால் 2025 சனவரி தொடக்கம் யூன் வரை நிதியியல் நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்ட நிருவாக ரீதியான தண்டப்பணங்கள்

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 19(2)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19(1)ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் பயனைக்கொண்டு, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத நிறுவனங்கள் மீது நிதியியல் தண்டப்பணங்கள் விதிக்கப்படுகின்றன. நிறுவனங்களின் தொடர்புடைய இணங்காமையின் தன்மை மற்றும் பாரதூரம் என்பனவற்றை பரிசீலனையிற்கொண்டு தண்டப்பணங்கள் விதித்துரைக்கப்படலாம்.

அதற்கமைய, பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான இலங்கையின் ஒழுங்குமுறைப்படுத்துனர் என்ற ரீதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு, நிதியியல் நிறுவனங்கள் மீதான இணங்குவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு 2025 சனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதியில் கீழே காட்டப்பட்டவாறு, மொத்தமாக ஆறு மில்லியன் மற்றும் ஐநூறு ஆயிரம் ரூபாய் கொண்ட (ரூ.6,500,000) தொகையினைத் தண்டப்பணமாக சேகரித்தது. தண்டப்பணங்களாக சேகரிக்கப்பட்ட தொகைத் திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்பட்டன.

1. **தேசிய சேமிப்பு வங்கி**

| | | |
|---|---|---|
| **விதிக்கப்பட்ட திகதி** | : | 2025 ஏப்பிறல் 16 |
| **தொகை** | : | ரூ. 3,500,000.00 (முப்பத்தைந்து லட்சம்) |
| **கொடுப்பனவுத் திகதி** | : | 2025 மே 02 |

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் அத்துடன் அதன் கீழ் வழங்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகள் என்பவற்றை கடைப்பிடிப்பதற்கு வங்கி தவறியமைக்காக பின்வருமாறு நிருவாக ரீதியாக தண்டப்பணம் விதிக்கப்பட்டது;

i. அத்தகைய கொடுக்கல்வாங்கலின் தொகை ரூபாய் ஒரு மில்லியன் (ரூ.1,000,000) அல்லது ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்கு சமமான தொகையை விஞ்சிகின்றவிடத்து, பல காசு கொடுக்கல்வாங்கல்களையும் இலத்திரனியல் நிதிய மாற்றல் கொடுக்கல்வாங்கல்களையும் குறித்துரைக்கப்பட்ட 31 நாட்களைக் கொண்ட காலப்பகுதியினுள் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவிப்பதற்கு வங்கி தவறியிருந்தது.

ii. 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகள் (ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மானம் 1373), மற்றும் 2017ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகள் (ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மானம் 1718) (கொரிய சனநாயக மக்கள் குடியரசுடன் தொடர்புடைய தடைகள்) என்பனவற்றின் கீழ் வழங்கப்பட்ட

பெயர்குறிக்கப்பட்ட ஆட்கள், குழுக்கள், மற்றும் நிறுவனங்களின் முழுமையான பட்டியல்களை பரீட்சிப்புத் திகதி அன்றுள்ளவாறு பேணுவதற்கு வங்கி தவறியிருந்தது.

iii. பல்வேறு இடைநிறுத்தப்பட்ட கணக்குகளினூடாக பற்றுக் கொடுக்கல்வாங்கல்களை செய்துள்ளமை மூலம் நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட மற்றும் அதைத்தொடர்ந்து கொழும்பில் நடாத்தப்படும் மேல் மாகாணத்தின் மேல் நீதி மன்றத்தினால் நீடிக்கப்பட்ட இடைநிறுத்தக் கட்டளைகளுடன் இணங்கியொழுகுவதற்கு வங்கி தவறியிருந்தது.

iv. முறைமைகளிலும் நடைமுறைகளிலும் மேற்குறித்த குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட போதிலும், வங்கியினால் பேணப்படுகின்ற பெயர்குறிக்கப்பட்ட ஆட்களுடனான, குழுக்களுடனான மற்றும் நிறுவனங்களுடனான தொழில் தொடர்புகள் பற்றிய நிகழ்வுகள் தளத்திலான பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்படவில்லை.

**2. பெல்லிஸ் லிமிடெட்**

**விதிக்கப்பட்ட திகதி** **:** 2025 மாச்சு 28

**தொகை** **:** ரூ.1,500,000.00 (பதினைந்து லட்சம்)

**கொடுப்பனவுத் திகதி** **:** 2025 ஏப்பிறல் 29

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டம் அத்துடன் அதன் கீழ் வழங்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகள் என்பவற்றை கடைப்பிடிப்பதற்கு கம்பனி தவறியமைக்காக பின்வருமாறு நிருவாகரீதியாக தண்டப்பணம் விதிக்கப்பட்டது;

i. இடர்நேர்வு அடிப்படையிலான அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வினை இனங்காணுதல், மதிப்பீடுசெய்தல் மற்றும் முகாமைசெய்தல் நோக்கத்திற்கான போதியளவு வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன வழிமுறைகளை எடுப்பதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

ii. இணையவழித் தளங்களினூடாக வியாபாரத் தொடர்பினைத் தாபித்துள்ள வாடிக்கையாளர்களிடமிருந்து அடையாள ஆவணப் பிரதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

iii. வியாபாரத் தொடர்பினை தாபிக்கின்ற நேரத்தில், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைத் தீர்மானங்களின் கீழ் வழங்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட ஆட்களுக்கு, குழுக்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக வாடிக்கையாளர்களை உறுதிசெய்வதற்கு கம்பனி தவறியிருந்தது. மேலும், பெயர்குறிக்கப்பட்ட பட்டியல்கள் இற்றைப்படுத்தப்படுகின்ற போது ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களை உறுதிசெய்வதற்கு ஏதேனும் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

iv. கொடுக்கல்வாங்கல்களை கண்காணித்து சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை இனங்காண்பதற்கான நடைமுறைகளை தாபிப்பதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

v. கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய வியாபார கடிதத்தொடர்பு பதிவுகளையும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனச் செயன்முறையின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்களையும் அடையாள ஆவணங்களின் பதிவுகளையும் பேணுவதற்கும் வைத்திருப்பதற்கும் நிறுவனம் தவறியிருந்தது.

vi. முறைமைகளிலும் நடைமுறைகளிலும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட போதிலும், நிறுவனத்தினால் பேணப்படுகின்ற பெயர்குறிக்கப்பட்ட ஆட்களுடனான, குழுக்களுடனான

மற்றும் நிறுவனங்களுடனான தொழில் தொடர்புகள் பற்றிய நிகழ்வுகள் தளத்திலான பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்படவில்லை.

**3. பெல்லாஜியோ லிமிடெட்**

**விதிக்கப்பட்ட திகதி** : 2025 மாச்சு 28

**தொகை** : ரூ.1,500,000.00 (பதினைந்து லட்சம்)

**கொடுப்பனவுத் திகதி** : 2025 ஏப்பிறல் 29

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டம் அத்துடன் அதன் கீழ் வழங்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகள் என்பவற்றை கடைப்பிடிப்பதற்கு கம்பனி தவறியமைக்காக பின்வருமாறு நிருவாகரீதியாக தண்டப்பணம் விதிக்கப்பட்டது;

i. இடர்நேர்வு அடிப்படையிலான அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வினை இனங்காணுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமைசெய்தல் நோக்கத்திற்கான போதியளவு வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன வழிமுறைகளை எடுப்பதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

ii. இணையவழித் தளங்களினூடாக வியாபாரத் தொடர்பினைத் தாபித்துள்ள வாடிக்கையாளர்களிடமிருந்து அடையாள ஆவணப் பிரதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

iii. வியாபாரத் தொடர்பினை தாபிக்கின்ற நேரத்தில், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைத் தீர்மானங்களின் கீழ் வழங்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட ஆட்களுக்கு, குழுக்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக வாடிக்கையாளர்களை உறுதிசெய்வதற்கு கம்பனி தவறியிருந்தது. மேலும், பெயர்குறிக்கப்பட்ட பட்டியல்கள் இற்றைப்படுத்தப்படுகின்ற போது ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களை உறுதிசெய்வதற்கு ஏதேனும் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனம் தவறியிருந்தது

iv. கொடுக்கல்வாங்கல்களை கண்காணித்து சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை இனங்காண்பதற்கான நடைமுறைகளை தாபிப்பதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

v. கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய வியாபார கடிதத்தொடர்பு பதிவுகளையும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனச் செயன்முறையின் போது பெற்றுக்ொகள்ளப்பட்ட ஆவணங்களையும் அடையாள ஆவணங்களின் பதிவுகளையும் பேணுவதற்கும் வைத்திருப்பதற்கும் நிறுவனம் தவறியிருந்தது.

vi. முறைமைகளிலும் நடைமுறைகளிலும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட போதிலும், நிறுவனத்தினால் பேணப்படுகின்ற பெயர்குறிக்கப்பட்ட ஆட்களுடனான, குழுக்களுடனான மற்றும் நிறுவனங்களுடனான தொழில் தொடர்புகள் பற்றிய நிகழ்வுகள் தளப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்படவில்லை.